பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

22 12 2025 MONDAY 12.40 PM

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** இந்தியா — நியூசிலாந்து இடையே வரலாற்று சிறப்பு மிக்க தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

**2.** மகளிரின் நிலை மற்றும் அவர்களின் முன்னேற்றத்திற்கான **Shakti** என்ற, உதவித்தொகையுடன் கூடிய மாணவர்களுக்கான ஆய்வு படிப்பை தேசிய மகளிர் ஆணையம் தொடங்கியுள்ளது.

**3.** கணித மேதை ராமானுஜத்தின் கணித கோட்பாடுகள் உலக கணித மேதைகளை ஆச்சரியப்படுத்துவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

**4.** பங்களாதேஷில் அவாமி லீக் கட்சி போட்டியிடாமல் தேர்தல் நடத்தப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அந்நாட்டின் முன்னாள் பிரதமர் திருமதி ஷேக் ஹசீனா தெரிவித்துள்ளார்.

**5.** தில்லியில் நிலவும் கடுமையான பனிபொழிவு காரணமாக விமானம் மற்றும் ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

இந்தியா — நியூசிலாந்து இடையே வரலாற்று சிறப்பு மிக்க தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

பிரதமர் திரு நரேந்திர மோடியும், நியூசிலாந்து பிரதமர் திரு **Christopher Luxon** க்கும் இடையே தொலைபேசி வாயிலாக நடந்த பேச்சு வார்த்தைக்கு பின்னர் இந்த ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டதாக இரு தலைவர்களும் கூட்டாக அறிவித்துள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் நியூசிலாந்து பிரதமர் இந்தியா வந்திருந்தபோது இந்த ஒப்பந்த்தை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன.

கடந்த ஒன்பது மாதங்களாக நடத்தப்பட்ட பேச்சுக்களுக்கு பின்னர் இந்த ஒப்பந்தம் தற்போது இறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தியா — நியூசிலாந்து இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்தும் என்றும் தாராள ஏற்றுமதி-இறக்குமதிக்கு வழிவகுக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருதரப்பிலும் முதலீடுகளை அதிகரிக்கவும் வழி ஏற்பட்டுள்ளது.

தொழில்துறையில் புதிய கண்டுபிடிப்பாளர்கள், தொழில் முனைவோர், விவசாயிகள், சிறுதொழில் நிறுவனங்கள் மற்றும் மாணவர்களுக்கும் புதிய வாய்ப்புகள் இந்த ஒப்பந்த்தின் மூலம் கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளதையடுத்து இந்தியா — நியூசிலாந்து இடையிலான வர்த்தகம் வரும் ஐந்தாண்டுகளில் இரட்டிப்பாகும் என்று இருநாட்டு பிரதமர்களும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

வரும் **15** ஆண்டுகளில் **20** பில்லியன் டாலர் அளவுக்கு இந்தியாவில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகள் குறித்தும் நியூசிலாந்து முயற்சி மேற்கொள்ளும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தும் என்றும், இருநாட்டு மக்களுக்கு இடையிலான தொடர்புகள், கல்வி வளர்ச்சி ஆகியவற்றுக்கு இது உதவிடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

நாட்டில் பெண்களின் நிலை குறித்தும் அவர்களின் மேம்பாட்டுக்கான கொள்கை முடிவுகளை வகுப்பது குறித்தும் ஆராய்ச்சி மேற்கொள்ளும் மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகையுடன் கூடிய **Shakti** ஆய்வு படிப்புத் திட்டத்தை தேசிய மகளிர் ஆணையம் தொடங்கியுள்ளது.

மகளிரின் பாதுகாப்பு, சமூகத்தில் அவர்களின் கண்ணியத்தை காப்பதற்கான ஆலோசனைகள், பாலியல் ரீதியான துன்புறுத்தல்களில் இருந்து விடுபடுவது, மகளிர் உரிமைகளை சட்ட ரீதியாக காப்பது மற்றும் அவர்களுக்கான நீதி கிடைப்பது, இணையதளம் வாயிலாக பெண்களை பாலியல் ரீதியாக அச்சுறுத்துவதை தடுப்பது, மகளிருக்கான உடல் ஆரோக்கியம் மற்றும் சத்துணவு, பொருளாதார மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பில் அனைத்துத் துறைகளிலும் பெண்களுக்கு வாய்ப்பு அளிப்பது உள்ளிட்ட விஷயங்களில் ஆய்வு மேற்கொள்ளும் மாணவர்கள் இத்திட்டத்தின்கீழ் ஊக்குவிக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**21** வயது முதல் **30** வயதுக்கு உட்பட்ட பட்டதாரிகள் பெண்களுக்கான ஆராய்ச்சிப் பணிகளில் ஈடுபடலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாணவர்களுக்கு ஆராய்ச்சிக்கான மானியமாக ஒரு லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்றும், ஆறுமாத காலத்தில் இந்த பணியை முடித்து ஆய்வறிக்கையை தாக்கல் செய்யலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 31-ஆம் தேதிவரை இதற்கான விண்ணப்பங்களை தேசிய மனித உரிமைகள் ஆயைத்தில் சமர்ப்பிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

கணித மேதை ஸ்ரீனிவாச ராமனுஜத்தின் 137வது பிறந்த தினம் இன்று தேசிய கணித தினமாக கொண்டாடப்படுகிறது.

உலக அளவில் ராமானுஜத்தின் கணினி கோட்பாடுகள் பெரிய அளவில் அங்கீகாரம் பெற்றுள்ளன.

அறிவியல் வளர்ச்சிக்கு கணிதத்தின் முக்கியத்துவம் குறித்து கல்வி நிறுவனங்கள், ஆராய்ச்சி அமைப்புகள் முக்கியத்துவம் அளிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதம் 22-ஆம் தேதி தேசிய கணித தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

கணித மேதை ராமானுஜத்தின் பிறந்தநாளையொட்டி மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் விடுத்துள்ள சமூக வலைதள பதிவில், தமிழகத்தை சேர்ந்த ராமானுஜம் கண்டறிந்த கணித கோட்பாடுகள் உலக கணித மேதைகளை ஆச்சரியப்படுத்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

தமது கண்டுபிடிப்புகளால் என்றென்றும் போற்றக்கூடியவராக அவர் திகழ்கிறார் என்றும் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் வரும் ஆண்டு நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலில் அஇஅதிமுக— பிஜேபி கூட்டணியில் ஒருமித்த கருத்துடைய கட்சிகள் வந்தால் ஏற்றுக்கொள்வோம் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

சேலத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழக பிஜேபி தலைவர் திரு நயினார் நாகேந்திரன், தவெக விருப்பப்பட்டால் கூட்டணியில் சேர்ந்து கொள்ளலாம் என்று

கூறியிருப்பது குறித்து செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு அவர் இவ்வாறு பதிலளித்தார்.

வரும் பொங்கல் பண்டிகையின்போது குடும்ப அட்டைதார்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்புடன் ஐந்தாயிரம் ரூபாய் வழங்க வேண்டும் என்று அஇஅதிமுக கோரிக்கை வைத்திருப்பதாகவும் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

<<<<<>>>>>

இலங்கையில் ஒற்றாட்சி அரசியல் அமைப்பு கொண்டுவரும் முயற்சிகளை மத்திய அரசு தடுத்து நிறுத்த வேண்டும் என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், அந்நாட்டில் கூட்டாட்சி அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டால்தான் இந்தியா — இலங்கை ஒப்பந்தத்தின் நோக்கம் நிறைவேறும் என்று கூறியுள்ளார்.

<<<<<>>>>>

தில்லி மற்றும் புறநகர் பகுதிகளில் கடுமையான பனிபொழிவு நிலவி வருகிறது.

இதன்காரணமாக, விமானம் மற்றும் ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, தில்லி விமான நிலைய அதிகாரி ஒருவர் ஆகாஷ்வாணி செய்திப்பிரிவுக்கு அளித்த பேட்டியில், தில்லி இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையத்தில் இருந்து, இன்று புறப்பட வேண்டிய பத்து விமானங்கள் போதிய வெளிச்சமின்மை காரணமாக ரத்து செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

தில்லியிலிருந்து புறப்படும் மற்றும் தில்லி வரவேண்டிய ரயில்களின் இயக்கம் பாதிக்கப்பட்டுள்ளதாக ரயில்வேயின் தில்லி கோட்ட அலுவலகம் தெரிவித்துள்ளது.

**17**-க்கும் மேற்பட்ட ரயில்கள் மூன்று மணிநேரம் தாமதமாக இயக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இன்றிரவும் பனிப்பொழிவு இருக்கக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

புதுதில்லி விமான நிலையத்தில் இருந்து, மும்பைக்கு இன்று அதிகாலை மணி **3.20**-க்கு புறப்பட்ட ஏர் இண்டியா விமானம் **AI-887**

புறப்பட்ட சில நிமிடங்களிலேயே தொழில்நுட்ப கோளாறு காரணமாக தரையிறக்கப்பட்டது குறித்து விரிவான அறிக்கை தாக்கல் செய்யுமாறு சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், முழுமையாக விசாரணை நடத்துமாறு விமான போக்குவரத்து தலைமை இயக்குனருக்கு உத்தரவிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விமானத்தில் இருந்த அனைத்து பயணிகளையும் பாதுகாப்பாக வேறு விமானங்கள் மூலம் அனுப்பிவைக்க ஏர் இண்டியா நிறுவனம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இதனிடையே, **AI-887** விமானத்தின் தொழில்நுட்ப கோளாறு சரி செய்யப்பட்டு, இன்று காலை மணி **10.10**-க்கு மும்பைக்கு புறப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<<>>>>>

பங்களாதேஷில் தமது தலைமையிலான அவாமி லீக் கட்சி போட்டியிடாமல் தேர்தல் நடத்தப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது

என்று அந்நாட்டின் முன்னாள் பிரதமர் திருமதி ஷேக் ஹசீனா தெரிவித்துள்ளார்.

அவாமி லீக் கட்சி தேர்தலில் போட்டியிடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், வரும் பிப்ரவரி மாதம் அங்கு தேர்தல் நடத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கும் நிலையில், திருமதி ஷேக் ஹசினா இதனை தெரிவித்துள்ளார்.

ஒரு செய்தி நிறுவனத்துக்கு அவர் அனுப்பியுள்ள தகவலில், பங்களாதேஷ் மக்களின் ஒரு வாக்கைகூட பெறாமல் திரு முகமத் யூனுஸ் அங்கு ஆட்சி செய்து வருவதாகவும், மக்களின் செல்வாக்கு பெற்ற தமது கட்சியை தேர்தலில் போட்டியிட முடியாமல் தடை செய்திருப்பதாகவும் கூறியுள்ளார்.

பங்களாதேஷ் மக்களை தமக்கு வாக்களிக்க விடாமல், தடுக்கும் நோக்கிலேயே இந்த நடவடிக்கையை திரு யூனுஸ் எடுத்துள்ளதாகவும் திருமதி ஷேக் ஹசீனா கூறியுள்ளார்.

<<<<<>>>>>

மேற்குவங்க மாநிலத்தில் சந்தேஷ்காலி விவகாரத்தில் முக்கிய திருப்பமாக வழக்கின் சாட்சியான Bholanath Ghosh-ஐ கொல்ல முயன்ற

முக்கிய குற்றவாளி ஆலிம் மொல்லாவை காவல்துறையினர் நேற்றிரவு கைது செய்துள்ளனர்.

கடந்த டிசம்பர் 10-ஆம் தேதி பசிர்ஹாட் நீதிமன்றத்தில் சாட்சி அளிக்க சென்றபோது Bholanath Ghosh-ன் கார் மீது லாரி மோதி விபத்துக்குள்ளானது.

இதில் அவரது மகன் மற்றும் ஓட்டுநர் உயிரிழந்தனர்.

இதுதொடர்பாக, வழக்கு பதிவு செய்யப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இதனைத்தொடர்ந்து தலைமறைவாக இருந்த ஆலிம் மொல்லாவை காவல்துறையினர் கைது செய்தனர்.

அவர் இன்று பஷிர்ஹாட் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளார்.

<<<<<>>>>>

அமெரிக்காவின் வெளிநாட்டு தூதரகங்களில் உள்ள சுமார் 30 மூத்த அதிகாரிகளை அந்நாட்டு அரசு திரும்பப் பெற்றுள்ளது.

இவர்களின் பதவிக்காலம் வரும் ஆண்டு ஜனவரி மாதம் முடிவடைவதையொட்டி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்பிரிக்காவில் உள்ள மொரிஷியஸ், மடகாஸ்கர், நைஜீரியா, உகாண்டா உள்ளிட்ட 13 நாடுகளில் உள்ள அமெரிக்க தூதர்கள் திரும்பப் பெறப்பட்டுள்ளனர்.

Fiji, லாவோஸ், பப்புவா நியூ கினியா, வியட்நாம் உள்ளிட்ட ஆறு ஆசிய நாடுகளில் பணியாற்றி வந்த தூதர்களும் திரும்பப் பெறப்பட்டுள்ளனர்.

எகிப்து, அல்ஜீரியா, ஸ்லோவாக்கியா, இலங்கை, நேபாளம், உள்ளிட்ட நாடுகளில் உள்ள தூதர்களும் திரும்பப் பெறப்பட்டுள்ளதாக திரு டொனால்டு ட்ரம்ப் நிர்வாகம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

<<<<<END>>>>>